செய்தி வெளியீடு எண் : 36 நாள் :25.07.2020

**தேனி மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் கொரோனா வைரஸ் (COVID-19) நோய்த்தொற்றினை கட்டுப்படுத்திடும் வகையில், மேற்கொள்ளப்பட வேண்டிய கூடுதல் நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது :-**

*****

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (25.07.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கொரோனா வைரஸ் (COVID-19) தடுப்பு பணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய கூடுதல் நடவடிக்கைகள் குறித்து, துறைசார்ந்த அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் **மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்** தெரிவித்ததாவது,

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் (Covid-19) தாக்கம் அதிகரித்துள்ளதால், கொரோனா வைரஸ் காய்ச்சலை கட்டுப்படுத்திட அரசால் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி தேனி மாவட்டத்திலும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டு, நோய்த்தடுப்பு நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக, வெளி மாநிலங்கள் மற்றும் வெளி மாவட்டங்கள் சென்று வந்த நபர்களின் மூலமாகவும் கொரோனா தொற்று பரவ வாய்ப்புள்ளதால், நமது மாவட்டத்தின் எல்லைப்பகுதிகளில் வருகை தருகின்றவர்களை கொரோனா வைரஸ் காய்ச்சல் தொடர்பாக, மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தீவிரமாக கண்காணிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இருந்தபோதிலும் மாவட்டத்தின் சிலப் பகுதிகளில் நோய்த்தொற்று பரவியுள்ளது. இதில் மாவட்டத்தில் உள்ள நகராட்சி, ஊராட்சி மற்றும் பேரூராட்சிப்பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ள கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் மேலும் நோய்த்தொற்று பரவாமல் இருப்பதற்கு அரசு அலுவலர்கள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக நோய்த் தொற்றினை கட்டுப்படுத்திடும் வகையில் குடியிருப்பு பகுதிகள் மட்டுமன்றி, நகரின் முக்கிய பகுதிகளிலும் சமூக இடைவெளியினை கடைபிடிக்கும் பொருட்டு, போக்குவரத்து வழிகளை மாற்றியமைத்தல், ஒருவழிப்பாதை, இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துவதற்கான இடங்களை தேர்வு செய்தல், சரக்கு வாகனங்களின் ஏற்றுமதி, இறக்குமதிக்கான நேரங்களை நிர்ணயத்தல் போன்ற நடவடிக்கைகள் குறித்து துறைச் சார்ந்த அலுவலர்கள், பொதுமக்களை பாதிக்காதவாறு திட்டமிடவும் மற்றும் நிரந்தர தீர்வு காணும்

வகையிலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக வணிகர்கள், பொதுமக்கள் வியாபார ரீதியாக ஒரே இடத்தில் கூடுவதை கண்காணித்து தடுக்க வேண்டும்.



மேலும், மாவட்டத்தில் கண்டறியப்பட்டு நடைமுறையில் உள்ள கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் மட்டுமன்றி, இதர அனைத்துப் பகுதிகளிலும் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் அதிகளவில் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளவும், அப்பகுதிகளில் காய்ச்சல் முகாம் நடத்தப்பட்டு, அறிகுறி தென்படுபவா்களை கண்டறிந்து அவா்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஒலிப்பெருக்கி, துண்டு பிரசுரங்கள் ஆகியவைகளை வழங்கி தொடா்ந்து விழிப்புணா்வு ஏற்படுத்த வேண்டும். கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கின்ற பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் சரிவர வழங்கப்பட்டு வருவதை உறுதிசெய்ய வேண்டும்.

இக்கூட்டத்தின் வாயிலாக வருவாய்த்துறை, உள்ளாட்சித்துறை ஆகிய துறைகளின் சாா்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதார நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணா்வு நடவடிக்கைகள் குறித்து துறை சாா்ந்த அலுவலா்கள் எடுத்துரைத்துள்ளனா். மேலும், பொதுமக்களுக்கு அரசின் திட்டங்களை கொண்டு சோ்ப்பதற்கு ஏதுவாக, அந்தந்த துறை சாா்ந்த பணிகளையும் நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், அதனுடன் சோ்த்து பொதுமக்களின் நலன்கருதி, கொரோனா வைரஸ் (COVID-19) நோய்த் தடுப்பு பணிகளை மேற்கொள்வது, ஒவ்வொரு அரசு அலுவலா்களின் தலையாய கடைமயாகும். எனவே ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தாா்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளா்ச்சி முகமை செயற்பொறியாளா் எஸ்.கவிதா, உதவி இயக்குநா் (பேரூராட்சிகள்) விஜயலட்சுமி, செயற் பொறியாளா் (பேரூராட்சிகள்) ராஜாராம், வட்டாட்சியா் தேவதாஸ், நகராட்சி சுகாதார அலுவலா் அறிவுச்செல்வம், உள்ளிட்ட துறை சாா்ந்த அலுவலா்கள் கலந்து கொண்டனா்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடா்பு அலுவலா், தேனி.**